# க.பொ.த (உ/த)ப் பரீட்சை - 2013
# வணிகக் கல்வி I
**நேரம் : 2 மணித்தியாலம்**

01. இலாபம் பெறும் நோக்கில் மனித தேவைகள் விருப்பங்களை நிறைவு செய்வதற்குத் தேவையான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல், விற்பனை என்பவற்றுடன் இணைந்த அனைத்து நடவடிக்கைகளும் பொதுவாக எவ்வாறு அழைக்கப்படும்?
   1. வியாபாரம் 2. கைத்தொழில்
   3. வணிகம் 4. வியாபாரம்
   5. விவசாயம்

02. வணிக நடவடிக்கைகளில் தாக்கங்களை உருவாக்குகின்ற காரணிகள் செயற்படும் சூழல் அழைக்கப்படுவது
   1. அகச்சூழல் 2. வணிகச்சூழல்
   3. புறச்சூழல் 4. மக்கட்சூழல்
   5. பூகோளச்சூழல்

03. இலங்கையில் தொழிற்படுகின்ற வணிக முயற்சிகளை வகைப்படுத்தும்போது பின்வருவனவற்றுள் தவறான தொகுதியாக அமைவது எது?
   1. விவசாயம், கைத்தொழில், சேவை வணிகம்
   2. விவசாயம், கடற்றொழில், காட்டுத்தொழில்
   3. சிற்றளவு, நடுத்தரளவு, பாரியளவு வணிகம்
   4. தனியார்துறை, அரசதுறை வணிகம்
   5. முதனிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை வணிகம்

04. கீழே பேரண்டச் சூழலும் அவற்றுள் தொடர்புடைய விசைகளும் தரப்பட்டுள்ளது. இவற்றுக் கிடையிலான சரியான தொடர்பினைக் காட்டும் தொகுதியினை தெரிவு செய்க.

| | வணிகச் சூழல் | | விசைகள் |
|---|---|---|---|
| A | இயற்கைச்சூழல் | 1 | வரிகளும், வட்டிவீதமும் |
| B | அரசியல் சட்டச் சூழல் | 2 | உள்ளீடுகளும் எரிபொருட்களும் |
| C | பூகோளச் சூழல் | 3 | சடங்குகளும், சம்பிரதாயங்களும் |
| D | சமூக கலாசாரச் சூழல் | 4 | சட்டங்களும் விதிகளும் |
| E | பொருளாதாரச் சூழல் | 5 | இலத்திரனியல் வணிகமும் வர்ததகமும் |

   1. A - 1 B – 2 C – 3 D – 4 E – 5
   2. A - 2 B – 4 C – 3 D – 5 E – 1
   3. A - 3 B – 1 C – 5 D – 2 E – 4
   4. A - 4 B – 3 C – 1 D – 5 E – 2
   5. A - 2 B – 4 C – 5 D – 3 E – 1

05. பங்குடமையில் பங்காளரது உச்ச எண்ணிக்கையினை வரையறுக்கும் சட்டம்
   1. பங்குடமை கட்டளைச் சட்டம்
   2. மோசடிகள் தவிர்ப்புக் கட்டளைச் சட்டம்
   3. வியாபார பெயர்ப்பதிவுக் கட்டளைச் சட்டம்
   4. வரையறுத்த பங்குடமைகள் கட்டளைச் சட்டம்
   5. கம்பனிச் சட்டம்

06. குறித்த ஒரு வகையான உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதும் வித்தியாசமான புவியியல் பிரதேசங்களில் நிறுவப்பட்டதும் ஒரு உடமையாளருக்குச் சொந்தமானதுமான விற்பனை நிலையங்கள்
   1. மடங்குக் கடைகள் 2. பகுதிக் கடைகள்
   3. பிரத்தியேகமான கடைகள் 4. பிணைக்கப்பட்ட கடைகள்
   5. சிறப்புச் சந்தைகள்

07. பின்வருவனவற்றில் இருந்து சந்தைக்கு இழுக்கப்பட்ட முயற்சியாண்மை அடிப்படையில் மிகவும் சரியான தொடர்பினைத் தெரிவு செய்க

1. வாய்ப்பு → எண்ணம் → பிரச்சினை → வெற்றிகரமான முயற்சி
2. எண்ணம் → வாய்ப்பு → பிரச்சினை → வெற்றிகரமான முயற்சி
3. பிரச்சினை → வாய்ப்பு → எண்ணம் → வெற்றிகரமான முயற்சி
4. வெற்றிகரமான முயற்சி → வாய்ப்பு → எண்ணம் → பிரச்சினை
5. பிரச்சினை → வெற்றிகரமான செய்தி → எண்ணம் → வாய்ப்பு

08. முயற்சியாண்மையாளர் ஒருவரின் மிகவும் முக்கியமான சிறப்பியல்புகளில் ஒன்று

1. தொடர்பாடல்
2. முகாமைத்துவம்
3. அனுபவம்
4. ஆர்வம்
5. கூட்டிணைப்பு

09. மக்கள் சாதாரணமாகக் கொள்வனவு செய்வதற்கு சிந்திக்காத உற்பத்திப் பொருட்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

1. வசதிப்பண்டம்
2. கடைப்பொருட்கள்
3. விசேட பொருட்கள்
4. நாடாப் பொருட்கள்
5. இழிவுப் பொருட்கள்

10. பின்வரும் அட்டவணையில் X நிரலானது பிரதான நிதி நிறுவன வகைகளினையும் Y நிரலானது நிதி நிறுவனங்களுக்கான சில பெயர்களினையும் காட்டுகின்றது.


| | X நிரல் | | Y நிரல் |
|---|---|---|---|
| A | உரிமம் பெற்ற வணிக வங்கிகள் | 1 | ஊவா அபிவிருத்தி வங்கி |
| B | உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள் | 2 | வரையறுத்த லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி |
| C | பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் | 3 | வரையறுத்த மேக்கன்ரைல் இன்வெஸ்ற்மன்ற் |
| | | 4 | வரையறுத்த கொழும்பு யூனியல் வங்கி |
| | | 5 | கப்பிற்றல் றிச் லீசிங் லிமிட் |
| | | 6 | ஸ்ரேற்பாங் ஒவ் இந்தியா |
| | | 7 | வரையறுத்த S.M.E வங்கி |
| | | 8 | வரையறுத்த இன்டஸ்றியல் பினான்ஸ் |
| | | 9 | தேசிய அபிவிருத்தி வங்கி |

X மற்றும் Y தொடர்பில் சரியான இணைப்பினைக் காட்டும் தொகுதி

1. A – 1, 2, 9 / B – 5,6,8, / C – 3,4,7
2. A – 5, 7, 9 / B – 2, 6, 8 / C – 1, 3, 4
3. A – 4, 6, 9 / B – 1, 2, 7 / C - 3, 5, 8
4. A – 3, 5, 6 / B – 1, 7, 8 / C – 2, 4, 9
5. A – 3, 7, 8 / B – 4, 6, 9 / C – 1, 2, 5

11. பின்வருவனவற்றுள் மிகவும் பொருத்தமான கூற்றினைத் தெரிவு செய்க.

1. செயற்பாட்டு மட்ட முகாமையாளர்களிலும் பார்க்க உயர்மட்ட முகாமையாளருக்குக் கூடுதலான தொழில்நுட்பத் திறன்கள் தேவையானதாகும்.
2. உயர்மட்ட முகாமையாளர்களிலும் பார்க்க நடுத்தரமட்ட முகாமையாளர்களுக்கு கூடுதலான எண்ணக் கருவாக்கத்திறன் தேவையானதாகும்.
3. செயற்பாட்டு மட்ட முகாமையாளர்களுக்கு எந்தவொரு எண்ணக்கருவாக்கத்திறன் தேவை யானதல்ல.
4. சகல மட்டத்திலுள்ள முகாமையாளர்களுக்கும் மானிடத்திறன் சம அளவில் தேவையான தாகும்.
5. சகல மட்டத்திலுமுள்ள முகாமையாளர்களுக்கும் எண்ணக்கருவாக்கத்திறன் தேவையான தாகும்.

12.


மேற்கூறப்பட்டவற்றுள் பொதுமுறைக் குறுக்குக் கோடிடல் மட்ட காசோலை வகை இலக்கம் எது?

1. 3 2. 4 3. 1 4. 5 5. 2

13. போக்குவரத்து ஊடாகமொன்றினைத் தெரிவு செய்யும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை உள்ளடக்கிய தொகுதி
1. பாதுகாப்பு / கிடைப்பனவுத் தன்மை / சக்தி / பாதை
2. கொள்ளளவு / கிடைப்பனவுத் தன்மை / பாதை / வேகம்
3. கிரயம் / பாதுகாப்பு / கொள்ளளவு / சக்தி
4. பாதுகாப்பு / வேகம் / பாதை / கொள்ளளவு
5. கொள்ளளவு / கிரயம் / பாதுகாப்பு / வேகம்

14. தொடர்பாடலின் அடிப்படை அம்சமான பின்னூட்டல் முக்கியம் பெறுவது
1. பெறுபவருக்கு செய்தியைச் சரியாகவும் விரைவாகவும் பெற்றுக்கொடுப்பதற்காகும்.
2. செய்தியை அனுப்புவதற்கு காரணத்தையும் அறிவிப்பதற்காகும்.
3. செய்தியை பெற்றுக்கொண்டதையும் விளங்கிக் கொண்டதையும் உறுதிப்படுத்துவதற்காகும்.
4. செய்தி தொடர்பாக பெறுபவரின் கவனத்தை ஏற்படுத்துவதற்காகும்.
5. யாரால் செய்தி தொடர்பாடப்பட்டது என்பதை தெரிவிப்பதற்காகும்.

15. சர்வதேச வியாபாரத்தின் வளர்ச்சிக்கு எதிராக ஏற்படும் தடைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - மொழி ரீதியிலான வேறுபாடுகள்
B - சுங்கவரி விதித்தல்
C - பொருளாதாரத்தடை விதித்தல்
D - இறக்குமதி ஒதுக்கீட்டினைத் தீர்மானித்தல்
E - கலாசார வேறுபாடுகள்
F - செலாவணிக் கட்டுப்பாடு

மேலே குறிப்பிட்ட தடைகளை இயற்கைத் தடைகள், இயற்கையில்லா தடைகள் என ஒழுங்குமுறையில் வேறுபடுத்தும் போது கிடைக்கும் விடைத்தொகுதி எது?

1. A, C, D / B, E, F
2. A, E / B, C, D, F
3. A, C / B, E, D
4. A, B, D / C, E, B
5. A, F / E, B, C, D

16. குறித்த அமைப்பினால் அடைவதற்கு எதிர்பார்க்கும் குறிக்கோள், நோக்கம் என்பவற்றைத் தீர்மானித்தல் அந்தக் குறிக்கோளை அடைவதற்கு மிகச் சிறந்த வழிமுறையை நிச்சயித்தல செயற்பாடு
1. முகாமைத்துவம்
2. திட்டமிடலாகும்
3. ஒழுங்கமைத்தலாகும்
4. திணைக்களப்படுத்தலாகும்
5. கட்டுப்படுத்தலாகும்

17. உற்பத்திக் கலவையின் உபகரணத்தை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதி எது?
1. தரம் / முடிவுப் பொருள் / பண்புகள் / வடிவம் / பொதி
2. தரம் / விலை / கழிவு / வடிவம் / பண்புகள் / முடிவுப் பொருள்
3. முடிவுப்பொருள் / பண்புகள் / வடிவம் / விளம்பரச் சேவை
4. முடிவுப்பொருள் / பண்புகள் / வடிவம் / விலை / சேவை
5. வடிவம் / பொதி / சேவை / பொறுப்பு / விலை

18. சமூகநிலைப்பாட்டினையும் மனித தேவை, விருப்பங்களைப் பூர்த்தி செய்வதையும் குறிக் கோளாகக் கொண்ட சந்தைப்படுத்தல் எண்ணக்கரு எது?
1. சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
2. சந்தைப்படுத்தலில் நேர எண்ணக்கரு
3. சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
4. எண்ணக்கருவாக்க சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
5. வாடிக்கையாளர் மைய எண்ணக்கரு

The National e-learning Portal for The General Education

19. பங்கு முதலீட்டின் மூலம் கிடைக்கப்பெறுகின்ற பங்கிலாபம், மூலதன இலாபம் என்ற பிரதிபலன்களுடன் இரண்டினையும் எடுத்துக் காட்டுவதற்காக கொழும்புப் பங்குப் பரிமாற்றினால் தயாரிக்கப்படும் விலைச்சுட்டி யாது?
    1. ஸ்ரீலங்கா விலைச்சுட்டெண்
    2. பூரண அனுகூலச் சுட்டெண்
    3. மொத்த பங்கு விலைச்சுட்டெண்
    4. எல்லை விலைச் சுட்டெண்
    5. மிட்காப் விலைச் சுட்டெண்

20. நிறுவனமொன்றின் ஊழியர்களின் சம்பளம் தொடர்பாக ஏற்பட்ட பிணக்கினைத் தீர்க்கும் குறிக்கோளுடன் தொழிற் சங்கத்திற்கும் முகாமைக்குமிடையே இரண்டு நாட்கள் கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கலந்துரையாடல் எவ்வாறு அழைக்கப்படும்?
    1. கூட்டு ஒப்பந்தம் எனப்படும்
    2. கூட்டு பேரம் பேசல் எனப்படும்
    3. தொழிற் தொடர்பு எனப்படும்
    4. தொழினுட்ப அனுமதி எனப்படும்
    5. தொழில்நுட்ப செயல் எனப்படும்

21. விளம்பரப்படுத்தலின் அடிப்படைச் சிறப்பியல்புகளும் நோக்கங்களும் கீழே தரப்படுகின்றன.

    A - தகவலளித்தல்
    B - பொதுமக்களுக்குச் சமர்ப்பித்தல்
    C - வியாபித்திருத்தல்
    D - தூண்டுதலளித்தல்
    E - ஆள்சாராத் தன்மை
    F - ஞாபகமூட்டல்
    G - மீள வலியுறுத்தல்
    H - விரிவாக்கல்

    மேலே குறிப்பிட்டவற்றுள் விளம்பரப்படுத்தலின் நோக்கம்
    1. A, D, E, F
    2. A, C, E, G
    3. B, C, E, H
    4. B, E, F, H
    5. B, C, D, F

22. நாளாந்த வணிக செயற்பாடுகளைக் கையாளும் ஒரு தகவல் முறைமை
    1. முகாமைத்துவ தகவல் முறைமை (mis)
    2. நிறைவேற்று உதவி முறைமை (ESS)
    3. தீர்மான உதவி முறைமை (DSS)
    4. கொடுக்கல் வாங்கல் செயன்முறைப்படுத்தல் (TPS)
    5. அறிவுச் செயல்முறை (KWS)

23. தகவலை வெவ்வேறு அடிப்படைகளின் கீழ் பாகுபடுத்த முடியும். சரக்குப் புரள்வு, மொத்த இலாபம், தேறிய இலாபம் போன்ற அளவு சார்ந்த தகவல்களை எந்த வகைப்படுத்தலின் அடிப்படையில் உள்ளடக்க முடியும்?
    1. மூலம்
    2. தன்மை
    3. நிகழ்ச்சி
    4. தீர்மானமான, நிகழ்தகவான
    5. கூட்டப்பட்ட மற்றும் கூட்டப்படாத

24. தரவு தயாரிப்புச் செயற்பாட்டின் பணிகளை சரியாகக் காட்டும் விடைத் தொகுதி
    1. பகுப்பாய்வு, வகைப்படுத்தல், தெரிவு செய்தல், சுருக்கப்படுத்தல்
    2. தெரிவு செய்தல், கணித்தல், பகுப்பாய்வு, சுருக்கப்படுத்தல்
    3. வகைப்படுத்தல், தெரிவு செய்தல், கணித்தல், சுருக்கப்படுத்தல்
    4. வகைப்படுத்தல், தெரிவு செய்தல், கணித்தல், பகுப்பாய்வு
    5. பகுப்பாய்வு, வகைப்படுத்தல், கணித்தல், களஞ்சியப்படுத்தல்

25. தொழில் வகைப்படுத்தலின்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
    A - கல்வித்தகைமை
    B - சேவைக்காலம்
    C - தொழிற்தகைமை
    D - பணியின் கடமைப் பொறுப்புக்கள்
    E - பயிற்சியும் அனுபவமும்
    F - பரிசீலனையும் மதிப்பீட்டுத் தன்மையும்
    G - சேவைத் திணைக்களம்
    H - பொறுப்புக்கூறக்கூடிய அதிகாரிகள்

மேலே தரப்பட்ட விடயங்கள் தொழில் விபரணத்தில் மாத்திரம் இடம்பெறும் விடயங்களை உள்ளடக்கிய விடையாவது

1. A, B, C, D, H
2. A, D, E, F, H
3. A, B, E, F, G
4. B, C, E, F, G
5. B, D, F, G, H

26. உற்பத்திப் பொருள் ஒன்றின் விலையினைத் தீர்மானிக்கும்போது சந்தைப்படுத்துவோரால் கருத்திற் கொள்ள வேண்டிய பிரதான காரணி
 1. கேள்வி, கிரயம், தரம்
 2. கேள்வி, கிரயம், பயன்பாடு
 3. கேள்வி, கிரயம், போட்டியாளர் விலை
 3. இலக்குச் சந்தை, போட்டியாளர் விலை
 5. கேள்வி, கிரயம், இலக்குச் சந்தை

27. உற்பத்திப் பொருள், விலை, இடம், மேம்படுத்தல் என்பவற்றின் இணைப்பு
 1. இலக்குச் சந்தை
 2. மேம்படுத்தல் கலவை
 3. சந்தைப்படுத்தல் குறிக்கோள்
 4. சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கள்
 5. சந்தைப்படுத்தல் கலவை

28. பின்வரும் அட்டவணையில் X நிரலானது பொருளின் வாழ்க்கை வட்டத்திற்கான கட்டங்களையும் Y நிரலானது வாழ்க்கை வட்டக் கட்டங்களுடன் தொடர்புடைய சில சிறப்பியல்புகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

| | X நிரல் | | Y நிரல் |
|---|---|---|---|
| A | அறிமுகம் | 1 | இலாபம் அதிகரித்தல் |
| B | வளர்ச்சி | 2 | அடிப்படை உற்பத்திப் பொருட்களின் வேறுபாடு |
| C | முதிர்ச்சி | 3 | விளம்பரப்படுத்தல் |
| D | வீழ்ச்சி | 4 | உயர்ந்தளவான கிரயம் |

X மற்றும் Yஇற்கு பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

 1. A – 1, B – 2, C – 3, D – 4
 2. A – 2, B – 3, C – 4, D – 1
 2. A – 3, B – 4, C – 1, D – 2
 4. A – 4, B – 1, C – 2, D – 3
 5. A – 4, B – 1, C – 3, D – 2

29. வணிகத் திட்டம் என்றால் என்ன?
 1. அடுத்த ஆண்டுக்கான வணிக நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்ட ஒரு வருடாந்த மதிப்பீடு ஆகும்.
 2. அடுத்த மூன்று ஆண்டுக்கான சகல நிதிக்கூற்றுக்களையும் உள்ளடக்கிய ஒரு ஆவண மாகும்.
 3. வணிகமொன்றின் தூரநோக்கு, இலட்சிய நோக்கு, இலக்கு மற்றும் நோக்கங்களைத் தெளிவாக விளக்கும் ஒரு ஆவணமாகும்.
 4. வணிகத்தின் உரிமையாளர், முகாமையாளர்கள் பற்றி விரிவாக வழங்கப்பட்ட ஒரு ஆவண மாகும்.
 5. வணிகத்தின் உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் நிதி நடவடிக்கைகளை விளக்கும் ஒரு ஆவணமாகும்.

30. வணிகத் திட்டமொன்றினைத் தயாரிக்கும் சந்தர்ப்பங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. பிரதான அச்சந்தர்ப்பங்களை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.
 1. புதிய வணிகமொன்றைத் தொடக்கும்போது / நிதிக்கூற்று தயாரிக்கும்போது
 2. வணிகமொன்றை விஸ்தரிக்கும்போது / வணிகமொன்றை ஒன்றிணைக்கும்போது
 3. வணிகமொன்றை நவீனமயப்படுத்தும்போது / நிதிக்கூற்றை தயாரிக்கும்போது
 4. வணிகமொன்றை வாங்கும்போது / ஊழியர்களை நியமிக்கும்போது
 5. வணிகமொன்றை ஒன்றிணைக்கும்போது / சாதாரண பங்கு விநியோகிக்கும்போது

**31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடை எழுதுக.**


31. தர முறைகளுக்கான சர்வதேச நியமம் .............................. என அழைக்கப்படுவதுடன் சூழல் பாதுகாப்புக்கான நியமம் ................................. என அழைக்கப்படும்.

32. சந்தைக்கு இழுக்கப்பட்ட முயற்சியாண்மையின் அடிப்படையில் பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.




33. வயர் இல்லாத தொழில்நுட்பத்தின் மூலம் கணினிகள் இணைக்கப்பட்டு ஒரு கட்டத்திற்குள் அல்லது சிறிய புவியியல் பிரதேசத்திற்குள் காணப்படும் ஒரு முறையை ……………………… என அழைக்கப்படுவதுடன் தொலைபேசி முறைமை அல்லது செய்மதிகளுக்கூடாகக் கணினி களால் இணைக்கப்பட்டு நாட்டுக்கிடையே காணப்படும் ஒரு முறைமை ………………………… என அழைக்கப்படும்.

34. பின்வரும் வரைபடம் தொடர்பாடற் செயன்முறையின் மூலக்கூறுகளை விவரிக்கப் பயன் படுத்தப்பட்டதாகும். வரைபடத்திலுள்ள வெற்றுப் பெட்டிகளுக்குச் சரியான சொற்களை இடுவதன் மூலம் நிரப்புக




35. அ. வணிக நிறுவனமொன்றின் ஊழியர்களது ஆக்கத்திறனூடாக உருவாகும் முயற்சியாண்மை …………………………… என அழைக்கப்படும்.

ஆ. சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழிலாளர்களுக்கு நிதி உதவிகளை வழங்குவதற் காக DFCC வங்கியும் ஏனைய வணிக வங்கிகளும் இணைந்து செயற்படுத்தும் கடன் திட்டம் …………………….. என அழைக்கப்படும்.

36. உற்பத்தி முறைகள் 3 குறிப்பிடுக.

(i) …………………………………………………………………………………

(ii) …………………………………………………………………………………

(iii) …………………………………………………………………………………

37. சந்தைப்படுத்தல் கலவையின் அடிப்படையில் Siva model இன் கூறுகளை கூறுக.

(i) …………………………………………………………………………………

(ii) …………………………………………………………………………………

(iii) …………………………………………………………………………………

(iv) ………………………………………………………………………………...

38. காப்புறுதிக் கோட்பாடுகளும் ஆயுட் காப்புறுதி தொடர்பாக செல்வாக்குச் செலுத்தப்படும் காப்புறுதிக் கோட்பாடுகளாக 1. ………………………..…… 2. ……………………..……… 3. …………………………… கோட்பாடுகள் கருதப்படும்.

39. காசோலையொன்றில் புறக்குறிப்பிடல் மேற்கொள்ளக்கூடிய நபர்களை குறிப்பிடுக.

……………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………..

40. அ. நிறுவனமொன்றின் நோக்கம், அடிப்படை இலக்குகள் மற்றும் தத்துவங்களை விவரிக்கும் கூற்று யாது?

……………………………………………………….

ஆ. சரியான தீர்மானம் எடுத்தலில் ஊழியர்களுக்கு விட்டுக்கொடுக்கும் தலைவரது தலைமைத்துவப் பாங்கு எது?

……………………………………………………….

41. அ. ஒருவரது கல்வி, அனுபவம், திறன்கள் உள்ளடங்கலாக வேலைக்கு மிகவும் பொருத்தமான நபரின் வகையை விவரிக்கும் கூற்று எது?

……………………………………………………….

ஆ. முக்கியமான பதவி நிலைகளுக்குச் சாத்தியமான பிரதியீடுகளை இனங்காண்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள திட்டத்தின் பெயர் எது?

……………………………………………………………………………….

42. சில வணிக நிறுவனங்கள் தமது ஒழுக்க கோவையை அச்சிட்டு வெளியிடுகின்றன. இந்த ஒழுக்கக் கோவைகளால் பாதுகாக்கப்படும் நான்கு (04) பகுதியினரைப் பெயரிடுக

(i) …………………………………… (ii) ……………………………………………

(iii)……………………………… (iv) …………………………………………

43. அரசாங்க செலவீனங்கள் இரு பிரதான பகுதிகளாக பாகுபடுத்தப்பட்டு உள்ளன. அவ்விரு பகுதிகளையும் பெயரிடுக.

(1) …………………………………… (2) …………………………………………..

44. இலத்திரனியல் வர்த்தகத்தின் நான்கு பரந்த பிரிவுகளையும் பெயரிடுக.

(i) …………………………………… (ii) ……………………………………………

(iii)……………………………… (iv) …………………………………………

45. முகாமையாளர்களுக்கு தொழில்நுட்ப, மானிட, எண்ணக்கருவாக்க திறன்கள் மட்டும் போதுமானவையல்ல. இவற்றுக்கு மேலதிகமாக முகாமையாளருக்கு அத்தியாவசியமானதாகக் காணப்படும் மூன்று (03) திறன்கள் பெயரிடுக.


(1) ……………………… (2) ……………………… (3) ……………………………

46. பின்வரும் அட்டவணையில் உற்பத்தியாளர் கோணத்திலான சந்தைப்படுத்தற் கலவை 4Pக்கு எதிராக வாடிக்கையாளர் கோவையிலான கலவை 4C யினைக் குறிப்பிடுக.

| உற்பத்தியாளர் கலவை 4P | வாடிக்கையாளர் கலவை 4C |
|---|---|
| 1. உற்பத்திப் பொருள் | ……………………………… |
| 2. விலை | ……………………………… |
| 3. இடம் | ……………………………… |
| 4. மேம்படுத்தல் | ……………………………… |

47. முகாமைத்துவத்தில் கட்டுப்பாட்டுச் செயன்முறையின் கட்டங்களை கீழ்வரும் வரைபடத்தில் நிரப்புக.

கட்டுப்பாட்டுச் செயன்முறை



1.

2.

3.

4.

48. நவீன தன்னியக்க பொறிமுறையுடன் முக்கிய துறைகள் 3ம் எவை

(1) ………………………… (2) ……………………… (3) ……………………………

49. சூழல் மாசடையும் வடிவங்களைக் குறிப்பிடுக.

(1) ………………………… (2) ……………………… (3) ……………………………

50. நிறுவனங்களில் பின்பற்றப்படும் பொதுவான தரக்கட்டுப்பாட்டு முறை 6 தருக.

(1) ………………………… (2) ……………………… (3) ……………………………


(4) ………………………… (5) ……………………… (6) ……………………………

e-தக்சலாவ The National e-learning Portal for The General Education

**வணிகக் கல்வி** **வினாத்தாள் I** **விடைகள்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | - | 3 | 11 | - | 4 | 21 | - | 1 |
| 2 | - | 2 | 12 | - | 5 | 22 | - | 4 |
| 3 | - | 2 | 13 | - | 5 | 23 | - | 2 |
| 4 | - | 2 | 14 | - | 3 | 24 | - | 3 |
| 5 | - | 5 | 15 | - | 2 | 25 | - | 5 |
| 6 | - | 1 | 16 | - | 2 | 26 | - | 3 |
| 7 | - | 3 | 17 | - | 1 | 27 | - | 5 |
| 8 | - | 4 | 18 | - | 1 | 28 | - | 4 |
| 9 | - | 4 | 19 | - | 2 | 29 | - | 3 |
| 10 | - | 3 | 20 | - | 2 | 30 | - | 2 |

31. ISO 9000 ISO - 14000
32. பிரச்சினை → வாய்ப்பு → எண்ணம் → வெற்றிகரமான → முயற்சி
33. உள்ளூர் பரப்பு வலையமைப்பு (Lan)
    பெரும்பரப்பு வலையமைப்பு (wan)
34.




35. உள்ளக முயற்சியாண்மை
    சுகன்யா
36. 1. வேலை உற்பத்தி 2. தொகுதி உற்பத்தி 3. பாய்ச்சல் உற்பத்தி
37. 1. தீர்வு (solution) 2. தகவல் (information)
    3. பெறுமதி (value) 4. மார்க்கம் (Access)
38. 1. பங்களிப்பு 2. இழப்பீடு 3. பதிலாள் வைப்பு
39. பிறப்பிப்பவர் , கொடுணி, பணம் பெறுபவர்
40. இலட்சிய நோக்கக்கூற்று தலையிடாத் தலைமைத்துவம்
41. வேலை குறித்து வைத்தல் மரபுரிமைத் திட்டம்
42. 1. உரிமையாளர் 2. சமூகம்
    3. ஊழியர்கள் 4. வாடிக்கையாளர்
43. நடைமுறைச் செலவு மூலதனச் செலவு
44. B2B – வணிகத்திலிருந்து வணிகத்துக்கு
    B2 C – வணிகத்திலிருந்து வாடிக்கையாளருக்கு
    C2C – வாடிக்கையாளரிடமிருந்து வாடிக்கையாளருக்கு
    G2C – அரசாங்கத்திலிருந்து வாடிக்கையாளருக்கு
45. தீர்மானம் எடுத்தல் திறன்கள் நேரமுகாமைத்துவத் திறன்கள்
    பூகோள முகாமைத்துவத் திறன்கள்
46. 1. தீர்வு 2. கிரயம்
    3. வசதி 4. தொடர்பாடல்
47. 1. நியமங்களை உருவாக்கல் 2. உண்மை ஆற்றுகை மதிப்பிடுதல்
    3. வேறுபாடுளை இனங்காணல் 4. சீராக்கங்களை மேற்கொள்ளல்
48. 1. CAD (கணினி உதவி வடிவமைப்பு) 2. CAM (கணினி உதவி உற்பத்தி)
    3. CNC (கணினி எண்ணக்கரு)
49. 1. நீர் மாசடைதல் 2. வளி மாசடைதல்
    3. மண் மாசடைதல் 4. ஒலி மாசடைதல்
50. 1. தர வட்டம் 2. முழுத்தர முகாமைத்துவம்
    3. குறித்த நேர தந்திரோபாயம் 4. கெய்சன் முறை
    5. கென்பான் முறை 6. நேர அடிப்படையிலான முகாமைத்துவம்

The National e-learning Portal for The General Education